அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

21 T I

## முதலாந் தவணை பரீட்சை – தரம் 12 – 2018
## First Term Test - Grade 12- 2018

சுட்டெண் : ......................

பொருளியல் I
Economics I

காலம் : 2 மணி

- ❖ **எல்லா வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரததிலேயே விடை எழுதுக**
- ❖ **பல்தேர்வு வினா தொடர்பில் சரியான விடையினை இனங்கண்டு புள்ளிக் கோட்டில் எழுதுக**

01. பின்வரும் கூற்றுக்களுள் நேர் கூற்றாக கருதக் கூடியது எது?
1. இலங்கையின் ஆடைக்கைத்தொழிலின் வளரச்சிக்கு GPS + சலுகை வழங்கப்பட வேண்டும்.
2. கல்வி மட்டத்திற்கும் வருமானமட்டத்திற்கும் நேரான தொடர்புள்ளது.
3. எல்லா மக்களுக்கும் இலவசமாக வைத்திய சேவை வழங்கப்பட வேண்டும்.
4. அரச மானிய உதவிகள் பெறும் குடும்பங்கள் வேறாக இணங்காணப்பட வேண்டும்.
5. எல்லா குடும்பங்களக்கும் அத்தியவசியப்பொருள் மானியம் வழங்கப்பட வேண்டும். (..........)

02. பொருளாதாரமொன்ரின் வீட்டுத்துறை, நிறவனத்துறையின் செயற்பாடுகள் தனித்தனியாக ஆய்விற்கு உட்படுத்துதல் எவ்வாறு அழைக்கப்படும்.
1. நேர்ப்பொருளியல்
2. நியமப்பொருளியல்
3. பேரினப்பொருளியல்
4. சிற்றினப் பொருளியல்
5. மனைப் பொருளியல் (..........)

03. பேரினப் பொருளியலினுள் உள்ளடக்க முடியாதது எது?
1. பொதுவிலை மட்டம்
2. மொத்த முதலீடு
3. மொத்த நிரம்பல்
4. மொத்த கேள்வி
5. நுகர்வோன் நடத்தை (..........)

04. “மனித விருப்பங்களுடன் ஒப்பிடும் போது வளங்கள் பற்றாக்குறையினாலேயே அருமை தோன்றுகின்றது” பொருளியல் ஆய்வு செய்யும் அடிப்படை விடயமாக அமைவது எது?
1. பொருட்கள் சேவைகள் மூலம் பூர்த்தி செய்யப்படும் மனித விருப்பங்கள் குறித்தாகும்.
2. விலை செலுத்தி பூர்த்தி செய்யப்படும் விருப்பங்கள் குறித்தாகும்.
3. அன்பு, கருணை, தன்னம்பிக்கை போன்ற தேவைகள் குறித்தாகும்.
4. காலத்துடன் வளரச்சியடையும் விருப்பங்கள் குறித்தாகும்.
5. மனித வாழ்க்கையுடன் தொடர்புடைய சகல தேவைகள் குறித்தாகும். (..........)

05. பொருளாதாரப்பண்டத்திற்கும் பொருளாதாரமல்லா பண்டத்திற்கும் பொதுவான பண்பாக அமைவது.
1. சந்தையினால் வழங்கப்படும்.
2. விலை செலுத்தாதோரை நுகர்விலிருந்து தடுக்க முடியாது
3. வழங்கலில் போட்டித்தன்மையுண்டு
4. மனித தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியது.
5. உற்பத்திக் கிரயமும் சாதன உரிமையும் உண்டு (..........)

06. பொருளாதார வளம் என்பதனை விளக்கும் சரியான கூற்று எது?
1. மனித விருப்பங்களை பூர்த்தி செய்ய போதுமான வளங்களை கொண்டுள்ளதோடு நேர்க்கனிய அமையச் செலவு உடையவை.
2. மனித விருப்பங்களுடன் ஒப்பிடுமிடத்து பற்றாக்குறையான வளங்கள் மற்றும் அமையச் செலவை ஏற்படுத்துபவை
3. உற்பத்திக்குப் பயன்படுத்தும் அனைத்து உள்ளீடுகளுமாகும்.
4. தனியார் துறையினரால் நிரம்பல் செய்யப்படும் வளங்கள்
5. அதிகரிக்கம் அமையச்செலவுடன் நிரம்பல் செய்யப்படும் வளங்களாகும். (..........)

07. மனித தேவைகள் விருப்பங்கள் குறித்து பொருத்தமற்ற கூற்று

1. உணவு, உடை, வசிப்பிடம், அன்பு, பலம், பொறுமை என்பன மனித விருப்பங்களாகும்.
2. தேவைகளை நிறைவேற்ற பொருட்கள் சேவைகள் மீதுள்ள ஆசை விருப்பமாகும்.
3. தேவைகள் வரையறுக்கப்பட்டவை ஆனால் விருப்பங்கள் எல்லையற்றவை
4. மனிதன் உயிர்வாழ அத்தியவசியமானவை தேவைகளாகும்.
5. தேவைகள் பொதுவானவை விருப்பங்கள் வேறுபட்டவைகளாகும். (..........)

08. அடம் ஸ்மித் கருத்தின் படி தொழிற்பிரிப்பு உற்பத்திக்கு நன்மையாக உள்ள போதும் சில சந்தர்பபங்களில் பாதகமாகவும் அமைகின்றது. தொழிற்பிரிப்பின் நன்மையாக கருத முடியாதது

1. உற்பத்தியின் வேகம் அதிகரித்தல்
2. உற்பத்தித் திறன் அதிகரித்தல்
3. காலத்தின் அமையச் செலவு குறைதல்
4. உற்பத்தியில் சிக்கனம் ஏற்படுதல்
5. தொழில்களுக்கு இடையில் ஊழிய நகர்வு இலகுவாக்கப்படுதல் (..........)

09. உற்பத்தியில் அமையச் செலவை ஏற்படுத்தும் பண்டமொன்று அழைக்கப்படுவது.

1. பொருளாதாரப் பண்டம் 2. இலவசப் பண்டம் 3. பொருளாதாரமல்லா பண்டம்
4. பூச்சிய அமையச்செலவுடைய பண்டம் 5. போட்டிப் பண்டம் (..........)


10. கீழுள்ள தகவல்களில் எது "மனித மூலதனம்" உருவாகுவதில் செல்வாக்கு செலுத்துகின்றது?

1. ஒரு நாட்டின் மூலதனப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு வேலையற்றோரை பயன்படுத்துதல்
2. உற்பத்திக்கான ஊழியப்படை பங்கு கொள்ளலை அதிகரித்தல்
3. ஊழியப்படையினருக்கான கல்வி, பயிற்சி, அனுபவம் மூலம் நிபுணத்துவ அறிவினை உயர்த்துதல்
4. புதிய மூலதனப் பொருள்களுடன் ஊழியர்களை பயன்படுத்துதல்.
5. ஊழியச் செறிவான உற்பத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளல் (..........)

11. உயர்கல்வியினை தொடரும் மாணவன் ஒருவரின் அமையச் செலவாகக் கருதக் கூடியது எது?

1. மாணவருக்கான உணவு, புத்தகங்களுக்கான செலவு
2. அரசிற்கு இம்மாணவனால் ஏற்படும் செலவு
3. மாணவன் தொடர்பில் பெற்றோருக்கு ஏற்படும் மாதாந்த செலவு
4. உயர்கல்வி காலத்தினுள் தொழில் செய்தோரால் கிடைக்கும் வருமான இழப்பு
5. உயர்கல்வி தொடர்பில் கல்வி நிறுவனம் செலவிடும் அளவு (..........)

12. கீழுள்ள உற்பத்தி சாத்திய வளையியுடன் பொருந்தும் கூற்று எது?




1. வேலையின்மை நிலவும் பொருளாதாரத்தில் வேலையின்மை குறைவடைதல்.
2. வேலையின்மை நிலவும் பொருளாதாரத்தில் வேலையின்மை மேலும் அதிகரித்தல்
3. வேலையின்மையில் இருந்து பொருளாதாரம் நிறைதொழில் மட்டத்திற்கு வருதல்.
4. நிறைதொழில் மட்டத்தில் உள்ள பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பு மேலும் அதிகரித்தல்.
5. நிறைதொழில் மட்ட பொருளாதாரத்தில் வேலையின்மை குறைதல். (..........)

13. உற்பத்தியின் போது தெரிவுப்பிரச்சினை ஏன் தோற்றம் பெறுகின்றது?

1. மனித தேவைகள் எல்லையற்றிருத்தல்.
2. பொருளாதாரம் மந்த கதியில் காணப்படுதல்
3. மனித விருப்பங்களுடன் ஒப்பிடும் போது வளங்கள் அருமையாகவும் மாற்றப்பயன்பாடு உடையனவாகவும் காணப்படுதல்.
4. பல்வேறு உற்பத்திக்காரணிகளை கொண்டு உற்பத்திகளை செய்ய வேண்டியிருத்தல்
5. உற்பத்தியின் போது அமையச் செலவொன்று ஏற்படுதல் (..........)

14. நிலையான மூலதனம் என்பதனுள் உள்ளடக்க முடியாதது

1. பொறித்தொகுதி உபகரணங்கள் 2. கட்டடவாக்கம் 3. ஆயுத சாதனங்கள்
4. நீர்ப்பாசன திட்டங்கள் 5. இருப்பு மாற்றம் (..........)

15. கோதுமை மா, துணி உற்பத்தி செய்யும் பொருளாதாரமொன்றின் உற்பத்தி சேர்க்கைகள் வருமாறு

| கோதுமை மா (kg) | துணி உற்பத்தி (m) |
|---|---|
| 0 | 60 |
| 10 | 50 |
| 20 | 30 |
| 30 | 0 |

இப்பொருளாதாரம் கோதுமை மா 10kg மற்றும் துணி 50m உற்பத்தி செய்வதாக கருதுக. கோதுமை மாவை மேலும் 10kg உற்பத்தி அதிகரிக்கும் போது ஏற்படும் எல்லை அமையச் செலவு துணி உற்பத்தியில் எவ்வளவு?

1. 10   2. 0.5   3. 2   4. 5   5. 1   (..........)

16. பொருளாதாரமொன்றினுள் வீட்டுத்துறை மேற்கொள்ளும் தீர்மானமாக கருதக்கூடியது எது?

1. வளங்களை ஒதுக்கீடு செய்வது தொடர்பான தீர்மானம்.
2. என்ன பொருளை உற்பத்தி செய்வது தொடர்பான தீர்மானம்.
3. வருமானத்தில் நுகர்வு, சேமிப்பு, முதலீடு தொடர்பான தீர்மானம்.
4. வளங்களை கொள்வனவு செய்வது தொடர்பான தீர்மானம்
5. பொருளாதார வளரச்சியினை துரிதப்படுத்தும் தீர்மானம். (..........)

17. சந்தைப் பொருளாதாரத்தினால் மேற்கொள்ளப்படும் பிரதான பணியாக அமைவது,

1. அருமையான வளங்களை உற்பத்திகளுக்கு பங்கீடு செய்தல்.
2. பொதுவளங்களின் உரிமையை உறுதிப்படுத்துதல்
3. வருமான பங்கீட்டில் நியாயத்துவத்தை ஏற்படுத்துதல்
4. பொருளாதார உறுதி நிலையை ஏற்படுத்துதல்
5. நிறை தொழில் மட்டத்தை ஏற்படுத்துதல் (..........)

18. சந்தை பொருளாதாரமொைன்றில் காணமுடியாத பண்பு எது?

1. உற்பத்திக்காரணிகள் அரச உடமையாக இருத்தல்
2. சுயமான ஆர்வமும் ஊக்கமும் இருத்தல்
3. அரச தலையீடு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்
4. உற்பத்தி, நுகர்வு சுதந்திரம் காணப்படுதல்
5. சந்தையில் போட்டி காணப்படுதல் (..........)

19. வள ஒதுக்கீட்டு பிரச்சினை என்பதனால் கருதப்படுவது யாது?

1. உற்பத்திக்கான தொழிநுட்ப தெரிவு பிரச்சினையாகும்.
2. அருமையான வளங்களை எந்த உற்பத்திக்கு ஒதுக்கீடு செய்வது என்பதாகும்.
3. யாருக்காக உற்பத்தி செய்வது என்பதாகும்.
4. குறைந்த வளப்பயன்பாடுடைய உற்பத்தி தெரிவாகும்
5. உற்பத்தியினை பங்கீடு செய்வதாகும். (..........)

20. உற்பத்தி சாத்திய எல்லையில் உள்ள எந்தவொரு புள்ளியினாலும வெளிப்படுத்தப்படுவது எது?

1. உற்பத்தியில் வினைத்திறன்   2. வளங்கள் ஒதுக்கப்பட்ட அளவு
3. உற்பத்தி அதிகரிப்பு   4. அதிகரிக்கும் அமையச் செலவு
5. உற்பத்தியில் வினைத்திறனின்மை (..........)


21. இரண்டு பொருட்களை மாத்திரம் உற்பத்தி செய்யும் பொருளாதாரமொன்றில் ஒரு உற்பத்தியினை சம அளவால் அதிகரிக்கும் போது இழக்கப்படும் மற்றைய உற்பத்தி படிப்படியாக அதிகரிக்குமாயின் உற்பத்தி சாத்திய விளையியானது.

1. நேர்கோடாகும்.   2. ஆரம்ப புள்ளிக்கு குழிவாகும்.   3. ஆரம்ப புள்ளிக்கு குவிவாகும்.
4. வெளியீட்டுடன் அதிகரிக்கும்.   5. வலப்புறமாக நகரும். (..........)

22. உற்பததி சாத்திய வளையி மூலம் விளக்க முடியுமான சிற்றினப் பொருளியல் விடயம் அல்லாதது.

1. அருமை, மாற்றுப்பயன்பாடு   2. தெரிவு   3. அடையச் செலவு
4. தொழிநுட்ப மாற்றம்   5. நிறை தொழில் மட்டம் (..........)

23. குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் பொருளாதாரமொன்றின் உற்பத்தி சாத்திய வளையி பின்வருமாறு இவ்வளையி தொர்பில் சரியான கூற்று எது?




| | Z புள்ளி காட்டுவது | U புள்ளி காட்டுவது |
|---|---|---|
| 1. | உற்பத்தியில் வினைத்திறன் | உற்பத்தியில் அமையச் செலவு |
| 2. | உற்பததியில் வினைத்திறனின்மை | நிறை தொழில் மட்டம் |
| 3. | நிறை தொழில் மட்டம் | நிறை தொழில் மட்டம் |
| 4. | உற்பததியில் வினைத்திறன் | உற்பத்தியில் வினைத்திறனின்மை |
| 5. | வளங்களின் அருமை | வளங்களின் பூரண பயன்பாடு |

(..........)

24. உற்பத்தி சாத்திய எல்லையின் வடிவம் தீர்மாணிக்கப்படுவது.
1. அமையச் செலவின் அடிப்படையில் ஆகும்.
2. வளப்பயன்பாட்டு முறைக்கமைய ஆகும்.
3. உற்பத்தியின் அளவிற்கு ஏற்ப ஆகும்.
4. வள ஒதுக்கீட்டு மாற்றத்திற்கு ஏற்ப ஆகும்.
5. உற்பத்தி செய்யும் பொருளின் தன்மைக்கு ஏற்ப ஆகும். (..........)

25. கீழுள்ளவற்றுள் எக்காரணியால் உற்பத்தி சாத்திய வளையியானது இடப்புறமாக நகர்வடையும்.
1. ஊழியப்படையின் அளவு அதிகரித்தல்
2. ஊழியப்படையின் கல்வி, பயிற்சி, அனுபவம் அதிகரித்தல்
3. புதிய வளங்கள் கண்டுபிடிக்கப்படல்
4. பயன்படுத்தப்படாத நிலம் உற்பத்தியில் பயன்படுத்தப்படல்
5. வளங்களின் ஒரு பகுதி அழிக்கப்படுதல் (..........)

26. குறித்ததொரு பொருளுக்கான நுகர்வோன் கேள்வி வளையியும் சந்தை கேள்வி வளையியும் வேறுபடுவது.
1. பதலீட்டு பொருட்கள் மூலமாகும் 2. நுகர்வோர் தெரிவின் மூலமாகும்.
3. குறித்த பொருளின் விலை மூலமாகும். 4. நுகர்வோரின் எண்ணிக்கையினால் ஆகும்.
5. நுகர்வோரின் வருமானத்தின் மூலமாகும். (..........)

27. குறித்தவொரு பொருளுக்கான கேள்வி வளையி வலப்புறம் நகர்விற்கு காரணமாக அமையாதது.
1. பதிலீட்டு பொருளின் விலை அதிகரிப்பு 2. நுகர்வோரின் வருமான அதிகரிப்பு
3. நுகர்வோரின் சுவை அதிகரிப்பு 4. எதிர்காலத்தில் விலை அதிகரிக்கலாம் என்ற எதிர்ப்பார்ப்பு
5. இணைப்புப் பொருட்களின் விலை அதிகரிப்பு (..........)


28. கீழுள்ள கூற்றுக்களுள் சரியான கூற்றை இனங்காண்க.
1. சாதாரண பண்டமொன்றிற்கு பதிலீட்டு விளைவும் நேர்க்கனியமாகும் வருமான விளைவும் நேர்க்கனியமாகும்.
2. சாதாரண பண்டமொன்றிற்கு பதிலீட்டு விளைவு எதிர்க்கனியமாகவும் வருமான விளைவும் நேர்க்கனியமாகவும் காணப்படும்.
3.. இழிவுப்பண்டமொன்றிற்கு பதிலீட்டு விளைவு நேர்க்கனியமாகும் வருமான விளைவு எதிர்க்கனியமாகும்.
4. இழிவுப்பண்டத்திற்கு பதிலீட்டு விளைவும் வருமான விளைவும் நேர்க்கனியமாகும்.
5. சாதாரண பண்டத்திற்கு பதிலீட்டு விளைவும் வருமான விளைவும் எதிரக்கனியமாகும். (..........)

29. கேள்விக்கோட்டின் வழியே நிலைகுத்தச்சில் விலை மேல் நோக்கி செல்லுமாயின் அதனால் ஏற்படுவது
1. நுகர்வோர் சுவை அதிகரித்தல் 2. விலை அதிகரிக்கலாம் என்ற எதிர்பார்ப்பாகும்.
3. நுகர்வோரின் வருமான அதிகரிப்பாகும். 4. நுகர்வோரின் தெரிவு அதிகரித்தலாகும்.
5. குறித்த பொருளின் கேள்வித்தொகை வீழ்ச்சியாகும். (..........)

30. குறித்த பொருளொன்றின் விலை ரூ 75 இலிருந்து ரூ 100 ஆக அதிகரிக்கும் போது அப்பொருளின் கேள்வித்தொகை 300 அலகில் இருந்து 250 அலகுகளாக வீழ்ச்சிகண்டது. இப்பண்டத்தின் விலை கேள்வி நெகிழ்ச்சி
1. -0.2 2. -0.5 3. -0.1 4. 0.1 5. -1.25 (..........)


31. கேள்வி விதி என்பது ஏனையகாரணிகள் மாறாத போது,
1. நுகர்வோனின் வருமானம் அதிகரிக்க கேள்வி அதிகரிக்கும்
2. விலை அதிகரிக்க கேள்வித் தொகை குறையும்.
3. விலை குறைய கேள்வி அதிகரிக்கும்.
4. விலை அதிகரிக்க கேள்வித்தொகை அதிகரிக்கும்.
5. விலை அதிகரிக்க கேள்வி அதிகரிக்கும் (..........)

32. சாதாரண பண்டமொன்றின் சந்தைக் கேள்வியை தீர்மானிக்கும் காரணியாக கருத முடியாதது.
1. நுகர்வோரின் வருமானம் 2. நுகர்வோரின் எண்ணிக்கை 3. தேசிய வருமான பரம்பல்
4. குறித்த பொருளின் விலை 5. எதிர்கால விலை எதிர்பார்ப்பு (..........)

33.



குறித்தபொருளொன்றின் கேள்வி வளையி வருமாறு. இதற்கான கேள்வி சார்பு யாது?

1. Qd = 350 – 5P 2. Qd = 70 – 0.2 P
3. Qd = 70 – 350 P 4. Qd = 70 + 0.2 P
5. Qd = 350 + 5 P (..........)

34.



கீழுள்ள கேள்விக்கோட்டில் A புள்ளியில் இருந்து B புள்ளிக்கான நகர்விற்கு காரணமாக அமைவது.
1. குறித்த பொருளின் விலை வீழ்ச்சி.
2. நுகர்வோரின் வருமான அதிகரிப்பு.
3. குறித்த பொருளின் உள்ளீடுகளின் விலை வீழ்ச்சி.
4. குறித்த பொருளின் உற்பத்தியில் தொழிநுட்ப பின்னடைவு.
5. உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு. (..........)

35. ஒரு பொருளின் விலை வீழ்ச்சி குறித்த பொருளின் கேள்வியை குறைக்குமாயின் அப்பண்டம்.
1. சாதாரண பண்டம் 2. நிரப்பும் பண்டம் 3. இழிவுப் பண்டம்
4. பதிலீட்டுப் பண்டம் 5. ஆடம்பரப் பண்டம் (..........)

36. விலைமாற்றத்தின் போது உற்பத்தியாளர் வருமானம் மாறாதிருப்பது.
1. PED = 1 2. PED > 1 3. PED < 1
4. PED = 0 5. PED = ∝ (..........)

37. நுகர்வோரின் வருமானம் ரூ 1000 இலிருந்து ரூ 1200 ஆக அதிகரிக்கும் போது கேள்வியானது 600 அலகிலிருந்து 700 அலகுகளாக அதிகரித்தது எனின் அப்பண்டம்.
1. பதிலீட்டுப் பண்டம் 2. அத்தியவசியப்பண்டம் 3. ஆடம்பரப் பண்டம்
4. இழிவுப் பண்டம் 5. கிபன் பண்டம் (..........)

38. தேயிலையும் கோப்பியும் ஒன்றுக்கொன்று பதிலீடாகும். கோப்பியின் விலை அதிகரிக்கும் போது.
   1. கோப்பியின் கேள்வித்தொகை அதிகரிக்கும்.
   2. தேயிலையின் கேள்வித்தொகை அதிகரிக்கும்.
   3. தேயிலையின் கேள்வி அதிகரிக்கும்.
   4. கோப்பியின் கேள்வி அதிகரிக்கும்
   5. கோப்பியின் கேள்வி குறையும் (..........)

39. கிபன் பண்டம் என்பது,
   1. விலைக்கும் கேள்வித்தொகைக்கும் நேரான தொடர்புடைய பண்டம்
   2. வருமானத்திற்கும் கேள்விக்கும் நேரான தொடர்புடைய பண்டம்
   3. வருமானத்திற்கும் கேள்வித்தொகைகுமிடையில் எதிரான தொடர்புடைய பண்டம்
   4. விலைக்கும் கேள்வித்தொகைக்கும் எதிரான தொடர்புடைய பண்டம்
   5. மற்றுமொரு பொருளின் விலைமாற்றத்தினால் குறித்த பொருளின் கேள்வியில் மாற்றம் ஏற்படும் பண்டம். (..........)

40. குறித்த பண்டமொன்றின் கேள்வி நெகிழ்ச்சியற்றதாயின்.
   1. விலை அதிகரிக்க வருமானம் குறையும்.
   2. விலை குறைவடைய வருமானம் அதிகரிக்கும்.
   3. விலை குறையும் போது வருமானம் மாறாது.
   4. விலை அதிகரிக்க வருமானம் அதிகரிக்கும்.
   5. விலை அதிகரிக்க வருமானம் மாறாது. (..........)

41. குறித்தவொரு பொருளின் விலை ரூ 6 உள்ளபோது கேள்வித்தொகை 100 அலகுகளாகும். விலை கேள்வி நெகிழ்ச்சி இப்பண்டத்திற்கு -1.0 ஆகும். 150 அலகுகள் கேள்வியின் விலை யாது?
   1. ரூ. 3.00  2. ரூ. 4.00  3. ரூ. 9.00  4. ரூ. 2.00  5. ரூ.10.00 (..........)

42. கேள்விக்கோட்டின் வழியே கேள்வித்தொகை அதிகரிக்கும் போது கேள்வி நெகிழ்ச்சிக்கு யாது நிகழும்.
   1. பூச்சியமாகும்
   2. முடிவிலியாகும்
   3. அதிகரித்துச் செல்லும்
   4. ஒன்றுக்கு சமமாகும்
   5. முறையாக குறைவடையும். (..........)

43. குறித்ததொரு பண்டத்திற்கான வருமான நெகிழ்ச்சி -0.8 ஆகும். வருமானம் 20% அதிகரித்தால் கேள்வி மாற்றம் மற்றும் பண்டவகைளினை இனங்காண்க.

| | கேள்விமாற்றம் | பண்ட வகை |
|---|---|---|
| 1. | 25% | சாதாரண பண்டம் |
| 2. | 20% | இழிவுப் பண்டம் |
| 3. | 16% | இழிவுப் பண்டம் |
| 4. | 25% | ஆடம்பரப் பண்டம் |
| 5. | 16% | அத்தியவசியப் பண்டம் |

(..........)

44. குறித்ததொரு சந்தையில் ஒரே மாதிரியான 10 உற்பததியாளர்கள் உள்ளதாக கருதுக. ஒரு உற்பத்தியாளனின் நிரம்பல் சார்பு $Qs = 300+25P$ எனின் சந்தை நிரம்பல் சார்பு யாது?
   1. $Qs = 325 + 25P$
   2. $Qs = 325 + 50P$
   3. $Qs = 30 + 2.5P$
   4. $Qs = 3000 + 25P$
   5. $Qs = 3000 + 250P$ (..........)

45. குறித்ததொரு பொருளுக்கான கேள்வி சார்பு $Qd = 30 – 3P$ ஆகும். ரூ 5 விலையில் விலை கேள்வி நெகிழ்ச்சி யாது?
   1. -1.0  2. - 0.1  3. - 3.0  4. -15.0  5. -6.0 (..........)

46. குறித்ததொரு பண்டத்தின்கேள்வி சார்பானது $Qd = 300-10 P$ இலிருந்து $Qd = 400 – 10P$ ஆக மாற்றமடைந்திருப்பின் இதற்கான காரணமாக கூறக்கூடியது.
   1. குறித்த பொருளின் விலை வீழ்ச்சி
   2. நுகர்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு
   3. குறித்த பொருளின் விலை அதிகரிப்பு
   4. நுகர்வோர் எண்ணிக்கை வீழ்ச்சி
   5. பதிலீட்டுப் பொருட்களின் விலை வீழ்ச்சி (..........)

47. குறித்ததொரு பண்டத்தின் நிரம்பல் அட்டவணை வருமாறு.

| P | Qs |
|---|---|
| 40 | 600 |
| 30 | 400 |

இவ்வட்டவணைக்கான நிரம்பல் சார்பு யாது?

1. Qs = 400 + 20 P  2. Qs = -100 + 20 P  3. Qs = 200 + 20 P
4. Qs = -200 + 20 P  5. Qs = 100 + 20 P  (..........)

48. போட்டியான ஐந்து நிறுவனங்களின் குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி வருமாறு.


| நிறுவனம் | A | B | C | D | E | F |
|---|---|---|---|---|---|---|
| குறுக்கு நெகிழ்ச்சி | 0.5 | 0.8 | 2 | 1.3 | 0.3 | 3 |

மேலுள்ள நிறுவனங்களுள் சந்தை சக்தி அதிகமான முதல் மூன்று நிறுவனங்களும் முறையே.


1. D, C, F  2. E, A, B  3. B, A, C  4. F, C, D  5. A, B, C  (..........)

49. இரண்டு வகையான பொருட்களின் கேள்விக் கோடுகள் வருமாறு.

**X பண்டம்**





**Y பண்டம்**




மேலுள்ள கேள்விக் கோடுகளின் மாற்றத்தை வைத்து X உம், Y உம் எவ்வகையின் பண்டம் என இனங்காண முடியும்.

1. பதிலீட்டுப் பண்டம்  2. இழிவுப் பண்டம்  3. நிரப்பும் பண்டம்
4. ஆடம்பரப் பண்டம்  5. அத்தியவசியப் பண்டம்.  (..........)

50. கீழுள்ள கேள்விக் கோட்டின் சரிவு யாது?




1. 0.1
2. 10
3. -0.1
4. -10
5. 20

(..........)

(50 x 2 = 100)

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

21 T II

முதலாந் தவணை பரீட்சை – தரம் 12 – 2018

First Term Test - Grade 12 - 2018

சுட்டெண் : ......................

# பொருளியல் II
# Economics II

காலம் : 3 மணி

**. (அ) பகுதியில் குறைந்தது இரண்டு வினாக்கள் (ஆ) பகுதியில் இருந்து குறைந்தது இரண்டு வினாக்கள் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

## பகுதி (அ)

01). i. பொருளியலானது இயற்கை விஞ்ஞானத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என விளக்குக. (புள்ளி 4)

ii. சிற்றினப் பொருளியல், பேரினப் பொருளியல் எனும் எண்ணக்கருக்களை உதாரணம் தந்து விளக்குக. (புள்ளி 4)

iii. பொருளாதாரப் பண்டமொன்று இனங்காணப்படும் முறையினை விளக்குக. (புள்ளி 4)

iv. குறித்ததொரு தெரிவின் அமையச் செலவை விளக்கி அமையச் செலவு தோற்றம் பெறுதவற்கான காரணத்தை குறிப்பிடுக. (புள்ளி 4)

v. கீழுள்ள எண்ணக்கருக்களை உற்பத்தி சாத்திய வளையியை பயன்படுத்தி விளக்குக.

(அ) பொருளாதார வீழ்ச்சி
(ஆ) Y பண்ட உற்பததியில் தொழிநுட்ப முன்னேற்றம்.
(இ) தொழிநுட்ப பின்னடைவு
(ஈ) உற்பத்தி திறன் அதிகரிப்பு (புள்ளி 4)

02). i. நேர்கூற்று, நியமக் கூற்று என்பவற்றை உதாரணங்கள் தந்து விளக்குக. (புள்ளி 4)

ii. கீழுள்ள இயற்கை வளங்களை புதுப்பிக்க கூடிய, புதுப்பிக்க முடியாத வளங்கள் என வகைப்படுத்துக.

(அ) வனம் (ஆ) பெற்றோலியம் (இ) உலோகம் (ஈ) மீன்வளம் (புள்ளி 4)

iii. பொருளியலில் அருமை என்றால் என்ன? விளக்குக. (புள்ளி 2)

iv. முயற்சி எனும உற்பததிக் காரணியை ஊழியத்திடம் இருந்து வேறுபடுத்திக் காட்டும் பண்புகள் யாவை? (புள்ளி 4)

v. பொருளாதார முறைமைகளை வகைப்படுத்தும் அடிப்படைகளை குறிப்பிட்டு அதனடிப்படையில் வகைப்படுத்தப்படும் பொருளாதார முறைமைகளை குறிப்பிடுக. (புள்ளி 6)

03). i. ஊழியத்தின் உற்பத்தித் திறனை தீர்மானிக்கும் காரணிகள் எவை? (புள்ளி 3)

ii. நிலையான மூலதனம், தொழிற்படு மூலதனம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு யாது? (புள்ளி 4)

iii. (அ) அடிப்படை பொருளாதார பிரச்சினைகள் எவை? (புள்ளி 3)

(ஆ) திட்டமிடல் பொருளாதாரமானது இப்பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்கின்றது என குறிப்பிடுக. (புள்ளி 6)

iv. கீழுள்ள கூற்றுக்களை சுருக்கமாக விளக்குக.

(அ) தேவை, விருப்பம்
(ஆ) பொருளாதார முறைமை (புள்ளி 4)

04). i. உற்பததி சாத்திய வளையி என்றால் என்ன? அதனை வரையும் போது கையாளும் எடுகோள்கள் எவை? (புள்ளி 6)

ii. ஆரம்பப் புள்ளிக்கு குழிவான உற்பத்தி சாத்திய வளையி அமையச் செலவு தொடர்பாக விளக்கும் கருத்து யாது? (புள்ளி 4)

iii. மூலதனம், முதலீடு, சேமிப்பு என்பவற்றிற்கிடையிலான தொடர்பினை விளக்குக. (புள்ளி 4)

iv. சந்தைப் பொருளாதாரமொன்றின் விலையின் தொழிற்பாடுகள் யாவை? விளக்குக. (புள்ளி 6)

## பகுதி (ஆ)

05). i. "கேள்வி" என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. (புள்ளி 2)

ii. "கேள்வி கோட்பாடு என்பது கேள்வி விதியாகும்" ஏற்பீரா? விளக்குக. (புள்ளி 4)

iii. (அ) கேள்வி நெகிழ்ச்சியின் வகைகளை குறிப்பிடுக. (புள்ளி 2)

(ஆ) ஒவ்வொரு வகையினையும் தனினத்தனியே விளக்குக. (புள்ளி 6)

iv. குறித்த பொருளொன்றின் நிரம்பலில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் காரணிகள் யாவை? (புள்ளி 4)

v. குறித்த பண்டமொன்றின் நிரம்பல் சார்பு $Qs = -100+5P$ எனின், இதற்கான நிரம்பல் வளையியை வரைக. (புள்ளி 2)

06). i. தனியார் கேள்வி, சந்தை கேள்வி என்பதனை விளக்குக. (புள்ளி 4)

ii. கேள்வி விதியின் எடுகோள்களை குறிப்பிடுக. (புள்ளி 4)

iii. புள்ளி நெகிழ்ச்சி, வில் நெகிழ்ச்சி என்பவற்றை விளக்குக. (புள்ளி 4)

iv. விலை கேள்வி நெகிழ்ச்சியை தீர்மாணிக்கும் காரணிகள் எவை? (புள்ளி 4)

v. "விலை கேள்வி நெகிழ்ச்சியின் தன்மைக்கு ஏற்ப உற்பத்தியாளன் வருமானம் வேறுபடும்" வரைபடம் மூலம் விளக்குக. (புள்ளி 4)

07). i. பயனுடைய கேள்வி என்றால் என்ன? (புள்ளி 2)

ii. நிரம்பலை விளக்கி நிறுவன நிரம்பலை தர்மாணிக்கும் 04 காரணிகளை குறிக்க. (புள்ளி 5)

iii. கேள்விதொகை மாற்றம், கேள்வி மாற்றம் இடையிலான வேறுபாட்டை விளக்குக. (புள்ளி 4)

iv. (அ) விலை கேள்வி நெகிழ்ச்சி குணகத்தின் அடிப்படையில் நெகிழ்ச்சி வகைகள் எவை? (புள்ளி 5)

(ஆ) விலை கேள்வி நெகிழ்ச்சி குணகம் நேர்க்கனியம் பெறுமா? சந்தரப்பங்களை குறிப்பிடுக. (புள்ளி 4)

08). i. (அ) நிரம்பல் விதி என்றால் என்ன? (புள்ளி 2)

(ஆ) நிரம்பல் விதி தொழிற்படுவதற்கான காரணங்கள் எவை? (புள்ளி 2)

ii. (அ) கேள்விக் கோடானது எதிர்க்கனிய சாய்வுடையதாக காணப்படக் காரணம் யாது? (புள்ளி 2)

(ஆ) அவ்விரு காரணங்களையும் விளக்குக. (புள்ளி 4)

(இ) சாதாரண பண்டமொன்றிற்கு விலை அதிகரிக்க அல்லது விலை குறைய விலை விளைவு தொழிற்படும் முறையை அட்டவணை மூலம் விளக்குக. (புள்ளி 4)

iii. குறித்த பொருளொன்றிற்கான கேள்வி நிரம்பல் அட்டவணை வருமாறு

| விலை | கேள்வித்தொகை | நிரம்பல் தொகை |
|---|---|---|
| 2 | 100 | 10 |
| 4 | 80 | 20 |
| 6 | 60 | 30 |
| 8 | 40 | 40 |
| 10 | 20 | 50 |

(அ) அட்டவணைக்கான கேள்வி, நிரம்பல் சார்புகளை பெறுக. (புள்ளி 4)

(ஆ) விலை ரூ 6, ரூ 8 ல் விலை கேள்வி நெகிழ்ச்சியை கணிப்பிடுக. (புள்ளி 2)

# முதலாம் தவணைப் பரீட்சை - 2018

## பொருளியல் Economics - தரம் 12

### பகுதி - I விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 2 | 11) 4 | 21) 2 | 31) 2 | 41) 2 |
| 2) 4 | 12) 2 | 22) 5 | 32) 3 | 42) 5 |
| 3) 5 | 13) 3 | 23) 4 | 33) 1 | 43) 3 |
| 4) 1 | 14) 5 | 24) 1 | 34) 4 | 44) 5 |
| 5) 4 | 15) 3 | 25) 5 | 35) 2 | 45) 1 |
| 6) 2 | 16) 3 | 26) 4 | 36) 1 | 46) 2 |
| 7) 1 | 17) 1 | 27) 5 | 37) 2 | 47) 4 |
| 8) 5 | 18) 1 | 28) 2 | 38) 3 | 48) 2 |
| 9) 1 | 19 2 | 29) 5 | 39) 1 | 49) 3 |
| 10) 3 | 20 1 | 30) 2 | 40) 4 | 50) 3 |

### பகுதி II

(1)

(i) பொருளியல் மனித நடத்தையை ஆய்வு செய்யும் சமூக விஞ்ஞானம் ஆகும். இயற்கை விஞ்ஞானம் சடப்பொருட்களை ஆய்வு செய்கின்றது.

* பொருளியலானது இரசாயன ரீதியான பரிசோதனைகளை மேற்கொள்வதில்லை. ஆனால் இயற்கை விஞ்ஞானம் இரசாயனரீதியான பரிசோதனைகளை மேற்கொள்கின்றது.
* பொருளியலாளர் ஓர் கட்டத்தில் கூறப்படும் பொது விதி பல உலகிற்கும் பொருந்தாது. இயற்கை விஞ்ஞானங்கள் கூறும் பொதுவான விதி பல உலகிற்கும் பொருந்தும்.
* பொருளியல் அளவுகளை ஆய்வு செய்கின்றது. இயற்கை விஞ்ஞானங்கள் சகல விடயங்களையும் ஆய்வு செய்யும்.

(ii) நுண்பொருளியல்:-
பொருளியலை சிறு கூறுகளாக வகைப்படுத்தி நுணுக்கமாக ஆய்வு செய்தல் நுண்பொருளியலாகும்.
(உ+ம்) கேள்வி, நிரம்பல், சந்தைசமநிலை, உற்பத்தி செலவு கோட்பாடு.

பேரினப் பொருளியல்:
பொருளியலை சிறு கூறுகளாக வகைப்படுத்தாமல் ஒரு மொத்த பொருளாதாரத்தினையும் ஒன்றாக ஆய்வுக்கு உட்படுத்தல் பேரினப் பொருளியலாகும்.
(உ+ம்) மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த உள்நாட்டு சேமிப்பு.


(iii) பொருளாதார பண்டமொன்று பின்வரும் பண்புகள் மூலம் இனம் காணப்படும்.

1. அருமையானது
2. உற்பத்தி செலவு உண்டு
3. அமையச் செலவு உண்டு
4. விலை உண்டு
5. உரிமைகொள்ளப்படும்.

IV மிகச்சிறந்த தெரிவு ஒன்றினை மேற்கொள்ளும் போது விட்டுக் கொடுக்கப்படும் அடுத்த மிகச்சிறந்த தெரிவு அமையச் செலவாகும். அமையச் செலவு தோன்றக் காரணம்

1. வளங்களின் அருமை
2. வளங்களின் மாற்றுப்பயன்பாடு

V (அ) (ஆ) (இ) (ஈ)




(உ)

(i) நேர்கூற்று :- பொருளாதார மாறிகளுக்கு இடையிலான தொடர்புகளை விளக்கும் கூற்றுக்களாகும். நடைமுறை உலகில் எவ்வாறு இருந்தது? எவ்வாறு இருக்கின்றது? எவ்வாறு இருக்கும்? போன்ற பொருளாதார தொடர்புகள் நேர்கூற்றில் விளக்கப்படும்.

நியமக்கூற்று :- பொருளாதார தொடர்புகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது நியமக் கூற்றில் விளக்கப்படும். இவை தனிப்பட்ட அபிப்பிராயம் என்பதனால் நடைமுறை உலகுடன் ஒப்பிட்டு சரி/பிழை காணமுடியாது. இவை விஞ்ஞான ரீதியானவை அல்ல.

(ii) (அ) - பகுதி உறுதியாக்க கூடியது

(ஆ) பகுதி உறுதியாக்க முடியாது

(இ) பகுதி உறுதியாக்க முடியாது

(ஈ) பகுதி உறுதியாக்க முடியும்.

(iii) மனிதனின் எல்லையற்ற விருப்பங்களுடன் ஒப்பிடும் போது வளங்கள் பற்றாக்குறையாக இருத்தல் வளங்களின் அருமை எனப்படும். இது எல்லா சமூகத்திற்கும் பொதுவான பிரச்சினையாகும்.

IV
1. உற்பத்திக்கான நிலைய உற்பத்தி காரணிகளை ஒன்றிணைத்தல்.
2. உற்பத்தி பற்றி தீர்மானித்தல்.
3. உற்பத்திக்கான தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல்.
4. புத்தாக்கங்களை அறிமுகம் செய்தல்.
5. நிச்சயமற்ற நிலைமைகளை எதிர்கொள்ளல்.

V
1. தீர்வு பொறிமுறை → சந்தைப் பொருளாதாரம்
   → திட்டமிடல் பொருளாதாரம்
2. வளங்களின் உரிமை → சந்தை பொருளாதாரம்
   → சமவுடமை பொருளாதாரம்
3. ஊக்கப் பரிசில் காரணிகள் → சந்தை பொருளாதாரம்
   → திட்டமிடல் பொருளாதாரம்
   → கலப்பு பொருளாதாரம்

(03)

(i) பௌதீக மூலதனம், மனித மூலதனம், தொழில்நுட்பம், சமூக மூலதன தொழில்முனைப்பு

(ii)
* உற்பத்திக்கு மனிதனால் உருவாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பௌதீக மூலதனமாகும்.
* உற்பத்திக்கு மனிதனால் உருவாக்கப்பட்ட பல்வேறு வகையான இயந்திரங்கள் தொழிற்படு மூலதனமாகும்.

(iii) (அ) என்ன பொருளை உற்பத்தி செய்தல்?
எவ்வாறு உற்பத்தி செய்தல்?
யாருக்காக உற்பத்தி செய்தல்?

(ஆ) திட்டமிடல் பொருளாதாரம் இம் மூன்று பிரச்சினைகளை சமூக நல நோக்கத்தில் திட்டமிடல் ஒரு சேர தீர்வு காணும் என்பதனை விளக்கி இருத்தல் வேண்டும்.

(iv)
(அ) மனிதன் உயிர் வாழ அடிப்படையானவை தேவைகளாகும். தேவைகளை நிறைவேற்றும் வழிவகை விருப்பங்களாகும்.

(ஆ) பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக மனிதனால் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு தீர்வு பொறிமுறைகள் பொருளாதார முறைமைகள் எனப்படும்

(04)

(i) பொருளாதாரமொன்று தன்னிடம் உள்ள வளங்களை நிலவும் தொழில்நுட்பத்தின் கீழ் முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்தி இரண்டு பொருட்களை உற்பத்தி செய்யும் போது இவ்விரு பொருட்களினதும் உச்சமட்ட சேர்மானங்களை காட்டும் வளையி ஆகும்.

எடுகோள்கள்

1. இரண்டு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன
2. வளங்கள் முழுமையாக பயன்படுத்தப்படுகின்றது.
3. தொழில்நுட்பம் நிலையானது
4. வளங்களின் அளவு நிலையானது.

(ii) ஆரம்ப புள்ளிக்கு குழிவான உற்பத்தி சாத்திய வளையியானது அதிகரிக்கும் அமைய செலவை காட்டும். (மாணவரின் வரைபடம் வேண்டும் விளக்கம் இருத்தல் வேண்டும்)

(iii) * உற்பத்திக்கு மனிதனால் உருவாக்கப்பட்ட மெய்ச் சொத்துக்கள் மூலதனம் எனப்படும்.
* குறிப்பிட்ட காலப்பகுதியில் மூலதனத்தில் ஏற்படும் அதிகரிப்பு முதலீடு எனப்படும்.
* பயன்பாட்டில் தேய்வு போக எஞ்சும் தொகை தேய்மானம்.

(iv) சந்தை பொருளாதாரத்தில் விலை பொறிமுறையானது 3 பணிகளை மேற்கொள்ளும்.
1. தகவல் வழங்குதல்.
2. ஊக்கப்படுத்தல்.
3. வளங்களை பங்கீடு செய்தல்.

(05)

(i) குறித்த காலப்பகுதியில் குறித்த சந்தையில் குறித்த பொருளுக்கு நிலவுகின்ற பல்வேறுபட்ட விலைகளின் கீழ் நுகர்வோன் கொள்வனவு செய்ய தயாராக உள்ள வெவ்வேறுபட்ட அளவுகள் கேள்வி எனப்படும்.

(ii) ஒரு வேறுபாடு.

கேள்வி தொழிற்பாடு கேள்வியை தீர்மானிக்கும் அனைத்து காரணிகளிலும் கேள்வியானது தங்கியிருப்பதை காட்டுகின்றது

$$QD = F(P, P_o, Y, T, E \ldots)$$

கேள்வி விதி என்பது கேள்வியை தீர்மானிக்கும் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் குறித்த பொருளின் விலையினால் கேள்வித் தொகையில் ஏற்படும் தாக்கம் விளக்கப்படும்

$$QD = F(P)$$

(iii) (அ)

(அ) விலைசார் கேள்வி நெகிழ்ச்சி


(ஆ) கேள்வியின் வருமான நெகிழ்ச்சி

(இ) பண்டம் சார் கேள்வி நெகிழ்ச்சி

(ஆ) ஒவ்வொரு நெகிழ்ச்சி வகைக்கும் விளக்கம் இருத்தல் வேண்டும்.

IV
1. உற்பத்தி செலவு அதிகரிப்பு
2. தொழில்நுட்ப பின்னடைவு
3. காலநிலை பாதகம்
4. கூலி மட்ட அதிகரிப்பு
5. மாற்று உற்பத்தி பொருளின் விலை உயர்வு
6. அரச வரி விதிப்பு.

V




(6)

(i) நிலவும் விலையில் குறித்த பொருளை குறித்த நுகர்வோன் கொள்வனவு செய்ய தயாரான அளவு நுகர்வோன் கேள்வியாகும். நிலவும் விலையில் குறித்த பொருளை சந்தையில் உள்ள அனைத்து நுகர்வோர்களும் கொள்வனவு செய்ய தயாரான அளவுகள் சந்தை கேள்வி எனப்படும்.

(ii) (i) விலை, கேள்வித்தொகை மட்டுமே மாறுகின்றது.
(ii) ஏனைய காரணிகள் மாறாதவை.
(iii) ஒரு சாதாரண பண்டம்
(iv) நுகர்வோன் பகுத்தறிவாளன்.

(iii) புள்ளி நெகிழ்ச்சி:- கேள்விக் கோட்டின் ஒவ்வொரு புள்ளியிலும் நெகிழ்ச்சியை கணிப்பிடுவதாகும்


$$PED = \frac{\Delta QD}{\Delta P} \times \frac{P_1}{QD_1}$$

வில் நெகிழ்ச்சி:- கேள்விக்கோட்டில் இரண்டு புள்ளிகளுக்கிடையில் நெகிழ்ச்சியை கணிப்பிடுவதாகும்

$$PED = \frac{\Delta QD}{\Delta P} \times \frac{(P_1 + P_2)/2}{(Q_1 + Q_2)/2}$$

(IV). 1. பண்டத்தின் தன்மை
2. பதிலீடுகளின் அளவு
3. பண்டத்தை வாங்குவதில் நேரம்
4. பண்டத்தின் பயன்பாடுகளின் அளவு
5. விலைமாற்றம் இடம்பெற்று கடந்துள்ள காலம்
6. வருமானத்தில் செலவிடப்படும் அளவு

(v)




(வரைபடம் அவசியம்)

(07)

(i) விருப்பம், கொள்வனவு சக்தி, கொள்வனவு செய்ய ஆயத்தம் இணையும் போது பயனுள்ள கேள்வியாகும்.

(ii) குறிப்பிட்ட காலப்பகுதியில் குறித்த ஒரு சந்தையில் குறித்த ஒரு பொருளுக்கு நிலவுகின்ற பல்வேறுபட்ட விலைகளில் உற்பத்தியாளர்கள் சந்தைக்கு அளிக்கத்தயாரான பல்வேறுபட்ட அளவுகள் நிரம்பல் எனப்படும்.

நிரம்பலைத் துணியும் காரணிகள் பின்வருமாறு
1. குறித்த பொருளின் விலை
2. ஏனைய பொருட்களின் விலை.
3. உற்பத்திச் செலவு
4. தொழில்நுட்பம்
5. காலநிலை.
6. உற்பத்தியாளரின் எதிர்பார்க்கை.

(iii) குறித்த பொருளின் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் விலைமாற்றத்தினால் கொள்வனவு செய்யும் அளவில் ஏற்படும் மாற்றம் கேள்வித் தொகை மாற்றமாகும்.

* குறித்த பொருளின் விலை மாறாதபோது ஏனைய காரணிகளில் ஏதாவது ஒன்றில் ஏற்படும் மாற்றத்தினால் கொள்வனவு செய்யும் அளவில் ஏற்படும் மாற்றம் கேள்வி மாற்றமாகும்.

(iv) 1. நெகிழ்ச்சியுள்ளது
2. நெகிழ்ச்சியற்றது
3. அலகு நெகிழ்ச்சி
4. முற்றாக நெகிழ்ச்சியற்றது
5. பூரண நெகிழ்வுள்ளது.

(v) உம். புறநீட்ட கேள்வியின் போது
1. சந்தை அந்தஸ்து மாற்றம்
2. பொருளின் தரம் விலை நிர்ணயத்தின் மாற்றம்
3. சுவை மாற்றம்

(8)

(i) [illegible] இருந்த பொருளின் விலையில் [illegible] நேரான தொடர்புள்ளது.

(ii) * உற்பத்தியாளர் [illegible] நேர்க்கோட்டு தொடர்புடையது.
* அதிகரித்து செல்லும் [illegible]

(10) (அ) வருமான விளைவு
பதிலீட்டு விளைவு

(ஆ) வருமான விளைவு, பதிலீட்டு விளைவு விலைக் கிடையில் வேறுபாடு.

(இ)

| விளைவுகள் | பதிலீட்டு விளைவு | வருமான விளைவு | விலை விளைவு |
|---|---|---|---|
| விலை குறைதல் | நேர் | நேர் | எதிர் |
| விலை அதிகரித்தல் | எதிர் | நேர் | எதிர். |

(11) (அ) $QD = 120 - 10P, \quad QS = 5P$

(ஆ) $PED = b \times P/Q$

$= -10 \times 8/40$

$= -10 \times 1/5$

$= -2$



LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න